# கவுண்டச்சிபுதூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

**பிறப்பிப்பவர்: திருமதி R.செல்வி தலைவர்**

அனுமதி எண்: 25 /2024-2025 நாள்: 05/06/2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - திருப்பூர் மாவட்டம் - தாராபுரம் வட்டம் - கவுண்டச்சிபுதூர் ஊராட்சி, சித்தராவுத்தன்பாளையம் கிராமம் **க.ச.எண்:104/4 ல் 1.99 ஏக்கர் 8050.00 ச.மீட்டர்** பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :1.நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் ந.க எண்:99/2019 திமா எண:75/2021 நாள்:09/03/2021

2. தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக தான பத்திர ஆவண எண்கள்: 8467/2020, 8466/2020 நாள்:10.11.2020

**உத்தரவு:**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் - கவுண்டச்சிபுதூர் ஊராட்சி, சித்தராவுத்தன்பாளையம் கிராமம் **க.ச. எண். 104/4 ல் 1.99 ஏக்கர் 8050.00 ச.மீட்டர்** பரப்பளவுள்ள இடத்தில் திரு.V.P.முருகேசன் மற்றும் இருவர், அவர்கள் குடியிருப்பு மனைகள் அமைத்துக்கொள்ள பார்வை - 1 ல் காணும் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியின் படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை மற்றும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் (பொ) திருப்பூர் மண்டலம் அவர்களின் பார்வையில் காணும் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.
2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்கக் கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும், கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அடைப்படை வசதிகளில் ஏதும் மாற்றம் இருந்தாலும் அதற்கான தொகை அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனைகள் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற்று கட்டப்படவும், கட்டிட பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமைக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்திலும் மழைநீா் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.
6. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்தவொரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

7. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவர் ஆவார்.

8. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் எந்தவித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசூரிக்கப்பட வேண்டும்.

9. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைத்தோ மாற்றியமைக்கவோ கூடாது.

10. வரைபடம் அங்கீகாராம் 1994 ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

11. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

12. நில உபயோக மாற்றத்திற்கான தொகை சந்தை மதிப்பில் 3% ரூ.86565 செ.எண்.20240605008426 நாள்:05.06.2024 படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

13. பரிசீலனை கட்டணம் ரூ. 1000/- மற்றும் அபிவிருத்திக் கட்டணம் 1 சென்டிற்கு ரூ. 550/- வீதம் 199 சென்டிற்கு ரூ.109450 கவுண்டச்சிபுதூர் VP223645-ன் வங்கி கணக்கு எண்:7389437016-ல் நாள்:05.06.2024 ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

14. பார்வை 1 ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும் இதன் நகல் வீட்டுமனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

15. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டாலோ அல்லது நாளது தேதியில் வழக்குகள் நடைபெற்று வருவதாக பின்னர் தெரியவந்தாலோ வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கான அங்கீகாரம் எந்தவித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

R. செல்வி 5/6/2024

தலைவர்
கவுண்டச்சிபுதூர் ஊராட்சி
(இரண்டாம் நிலை)

இணைப்பு:

அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் 2
மனைப்பிரிவு நிபந்தனைகள் 2

பெறுநர்:

திரு. V.P.முருகேசன் மற்றும் இருவர்,
34, வெள்ளைக்கவுண்டன்புதூர்,
சங்கரண்டாம்பாளையம் அஞ்சல்,
தாராபுரம் வட்டம்.
திருப்பூர் மாவட்டம்.